வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 54/2022

வழக்கு சாட்சி PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜான்சன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஸ்டீபன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 56 |

தேதி 21.11.2024

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

**நான் கொளத்துரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அ.சா.1யை தெரியும். ஆஜர் எதிரி குணசேகரன் எங்களது கம்பெனிக்கு வருவார். பணம் வசூல் செய்வதற்காக வருவார். சர்வலிங்கம் ஆஜர் எதிரியிடம் சீட்டு கட்டிவந்தார். சீட்டு பணத்தினை கேட்டபோது தராமல் கொலை மிரட்டல் விடுத்ததாக சர்வலிங்கள் என்னிடம் கூறினார். 2017ம் ஆண்டு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறினார். லட்சக்கணக்கில் பணம் கொடுத்ததாக கூறினார். அனைத்தும் சர்வலிங்கம் கூறிதான் தெரியும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.**

**குறுக்கு விசாரணை**

**நான் எதிரியை எங்குவசிக்கிறார் என்றால் பொன்னியம்மன்மேடு. அவரது குடும்பம் என்னவென்றால் இரண்டு மகன்கள் உள்ளார்கள். சீட்டு நடத்தும்போது எனக்கு தெரியுமா என்றால் வீட்டிற்கு போனதில்லை. வேறு வழக்குகள் தாக்கல் செய்துள்ளதை சர்வலிங்கம் கூறியுள்ளாரா என்றால் இல்லை. எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் ஒன்றாக வேலை செய்தோம். நான் சீட்டு**

ஏலத்திற்கும் பணம் செலுத்துவதற்கோ சென்றுள்ளேனா என்றால் இல்லை. நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் குணசேகரனை கம்பெனியில் பார்த்துள்ளேன். சர்வலிங்கம் கூறிதான் எனக்கு தெரியும் என்பதால் சர்வலிங்கம் என்னிடம் பொய்யாக கூறியுள்ளார் என்றால்இல்லை. எதிரி வருவார் நான் பார்த்துள்ளேன். கொலை மிரட்டல் விடும்போது நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீட்டு நடத்தப்படவில்லை என்றாலும் பணம் கட்டவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.